ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2313/48 - 2023 ජනවාරි මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.05

*2313/48 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபை

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடக்கு மாகாண மாகாண சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2(1) (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான) சட்டத்தின் 2(1) (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247 ஆம் பிரிவின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் மூலம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையை இத்தால் அறிவிக்கின்றேன்.

**ஜீவன் தியாகராஜா,**
ஆளுநர்,
வடக்கு மாகாணம்.

ஆளுநர் செயலகம்,
வடக்கு மாகாணம்,
*2022, திசெம்பர் 31.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**கட்டளை**

பருத்தித்துறை நகர சபையின் 2023 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத்திட்டம் குறித்த சபையின் தவிசாளர் வெற்றிடம் ஏற்பட்டமையால் 2022.12.31 ஆந் திகதி வரை நிறைவேற்றப்படாமையால் 2023.01.01 ஆந் திகதி முதல் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படும் வரை பருத்தித்துறை நகர சபையின் உப தவிசாளர் மதினி நெல்சன் அவர்களுக்கு 2023 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவின மதிப்பீட்டின்படியான பின்வரும் செலவுகளை மட்டும் மேற்கொள்வதற்கு அங்கீகாரத்தை வழங்குகின்றேன்.

1. சம்பளங்களும் படிகளும் ;
2. பயணப்படிகள் ;
3. ஏற்றியிறக்கல் தொலைத்தொடர்பு மற்றும் பயன்பாட்டுச் சேவைகள் ;
4. வழங்கு பொருட்களும் தேவைப் பொருட்களும்.

EOG 01-0026

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.